5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2014 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. வரவு—செலவுத் திட்டம், 2014—2015, பொது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களினுடைய குரலினை தமிழக சட்டப் பேரவையிலே தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே எதிரொலிக்க, என்னை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராக்கி அழகுபார்த்த எனது அரசியல் ஆசான், தமிழக இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், ஏழையெளிய மக்களின் பாதுகாவலன், தாய்மார்களின் தவப் புதல்வன், தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, 2014-2015 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திலே எனது கருத்துகளை இப்பேரவையிலே பதிய வைக்க விழைகின்றேன்.

2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வருவாய் வரவு ரூ.1,27,389.83 கோடியில், வருவாய் செலவினமாக ரூ.1,27,100.47 கோடி போக, மீதமுள்ள தொகை உபரி வருவாய் ரூ.289.36 கோடி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல கடன் கணக்கிலே விதிகளுக்குட்பட்டு 25,000 கோடி ரூபாய் கடன் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விதிகளுக்குட்பட்டிருந்தாலும்கூட, நம் தமிழக அரசு கடனுக்காக நாம் செலுத்துகின்ற வட்டித் தொகை ஏறக்குறைய சுமார் 15,463.90 கோடி ரூபாய் என பொதுமக்களின்மீது கடன் சுமை இந்த ஆண்டும் ஏற்றப்படுகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் மற்றும் இந்த நிதி ஆண்டினையும் சேர்த்து ரூ.50,000 கோடி வட்டியாக பொது மக்களின்மீது சுமையேற்றப்படுகிறது. அதற்கு மாறாக, தமிழகத்திலே வருவாய்